செய்தி வெளியீடு எண் :107 நாள் : 06.12.2021

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு.ஆர்.என்.ரவி அவர்களின் முப்படை வீரர்களின் கொடி நாள் செய்தி

தேசத்தின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டின் அடையாளமாக முப்படை வீரர்கள் திகழ்கிறார்கள். முப்படை வீரர்களுடைய குன்றாத விசுவாசமும் கடமையில் காட்டும் உண்மையான அர்ப்பணிப்பும் இந்தியாவை வலிமையுள்ள தேசமாக மாற்றியுள்ளது. வெளிநாட்டின் ஆக்கிரமிப்பு, உள்நாட்டுக் கலவரங்கள், இயற்கையின் சீற்றம் போன்றவற்றினை தீரமுடன் எதிர்கொண்டு தேசத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் அவர்கள் ஆற்றிய தியாகம் மக்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. அவர்களுடைய இளமைக் காலத்தையும், வாழ்க்கையின் சிறந்த காலத்தையும் நாட்டிற்காகவே அர்ப்பணித்து சேவையாற்றி இராணுவத்திலிருந்து விடைபெறும் போது நம்முடைய நன்றியை அவர்களுக்கு காணிக்கையாக்க வேண்டியது அவசியமாகும்.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் கொடி நாள் நிதிக்கு கணிசமாக பங்களிப்பதற்கு மக்களுக்கு பொன்னான வாய்ப்பை அளிக்கும் வகையில், டிசம்பர் மாதம் 7ஆம் நாள் முப்படை வீரர்களுக்கான கொடி நாளாகக் கொண்டாடப்பட்டு வருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

முப்படை வீரர்களுக்கான கொடி நாள் நிதிக்கு தமிழக மக்கள் தாராளமாக தங்களது பங்களிப்பினை அளிக்குமாறும் அவர்கள் ஆற்றிய தியாகங்களுக்கு நன்றி தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

வெல்க தமிழ்நாடு!

ஜெய்ஹிந்!

ஆர்.என்.ரவி
தமிழ்நாடு ஆளுநர்

..............................................................................................

ஆளுநர் மாளிகை, சென்னை - 22. ஒம்/-

நாள் : 06.12.2021 கூடுதல் இயக்குனர் (ம. தொ)

Press Release No:107 Date : 06.12.2021

**HON'BLE GOVERNOR OF TAMIL NADU,**
**THIRU.R.N.RAVI'S MESSAGE ON**
**ARMED FORCES FLAG DAY 2021**

The Armed Forces are symbol of the security and Integrity of the Nation. Their unflinching loyalty and sincere devotion to duty has made India a strong Nation. Their sacrifices in safeguarding the interests of the Nation in the face of external aggression, internal disturbances and nature's fury have won them the admiration of the people. Having spent the youthful and best part of their life in the service of the Nation, it is imperative that we show our gratitude to them, when they leave the Armed Forces.

I am happy that the Armed Forces Flag Day is being commemorated on 7th December, to give the people a golden opportunity to contribute substantially to the Flag Day Fund which will be utilised for the welfare of Ex-servicemen and their families.

I appeal to the people of Tamil Nadu to contribute generously to the Armed Forces Flag Day Fund & show our gratitude for their sacrifices for the country.

Jai Tamil Nadu !

Jai Hind !!

**R.N. Ravi**
**Governor of Tamil Nadu**

..................................................................................................................................

Raj Bhavan, Chennai - 22. Sd/-xx

Date : 06.12.2021 Addl.Director (PR)